வழங்கியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில், அங்கு மாணவர்களின் சேர்க்கைக்குத் தகுந்தாற்போல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலனை செய்து, கடந்த காலத்திலே 67 கல்லூரிகள் அறிவிக்கப்பட்டதிலே, மேலூர் தொகுதியில், கல்வியியல் கல்லூரி ஒன்றும் வரவிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், எந்தெந்தப் பகுதிகளில் மாணவர்களுடைய சேர்க்கை எண்ணிக்கை கூடுதலாக இருக்கிறதோ அந்தப் பகுதியைக் கண்டறிந்து, அவசியம் இருப்பின் அங்கே கல்லூரியை உருவாக்க, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசானது பரிசீலனை செய்யும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

18—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***900—திரு. எஸ். ஆஸ்டின்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி தொகுதி, தோவாளை ஒன்றியப் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படியெல்லாம் கேட்டால் எப்படி? வாய்ப்பு இருக்கிற அளவுக்குள்தானே தர முடியும்? உங்கள் அனைவருக்குமே வாய்ப்புத் தர வேண்டுமென்றால் எப்படி? (குறுக்கீடு) ஒரு கேள்வியை நான் எவ்வளவு நேரம் நீட்டிக்க முடியும்? (குறுக்கீடு) அதெல்லாம் இருக்கிறது. (குறுக்கீடுகள்) எங்களுக்கும் programme எப்படி நடத்த வேண்டுமென்று தெரியும்.

நடத்துகிறோம், பேசாமல் உட்காருங்கள். மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி தொகுதி, தோவாளை ஒன்றியப் பகுதியில் நடப்பு கொள்முதல் பருவத்தில் திட்டுவிளை, தாழக்குடி, செண்பகராமன்புதூர் ஆகிய மூன்று இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. செண்பகராமன்புதூரில் ரூபாய் 30 இலட்சம் செலவில் நிரந்தர நெல் கொள்முதல் நிலையமும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தோவாளை ஒன்றியப் பகுதி என்பது, நெல் அதிகமாக விளையக்கூடிய ஒரு பகுதியாகும். அங்கு சுமார் கிட்டத்தட்ட 3,000–லிருந்து 4,000 ஹெக்டேர் நிலத்தில் நெல் பயிரிடப்படுகிறது. சுமார் 20,000 டன் நெல் அங்கே உற்பத்தி செய்யப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, தாழக்குடி, திட்டுவிளை உள்ளிட்ட 6 நெல் கொள்முதல் நிலையங்கள் அறிவிக்கப்பட்டு, அந்தந்தப் பகுதியில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு, கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, தாழக்குடி, திட்டுவிளை, செண்பகராமன்புதூர் பகுதிகளிலே நெல் கொள்முதல் செய்யப்படும் என்று 2014–ல் மீண்டும் அறிவிக்கப்பட்டது. ஆனால், தற்போது அங்கே நெல் கொள்முதல் நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, மீண்டும் தோவாளை ஒன்றியப் பகுதியிலுள்ள தாழக்குடி, திட்டுவிளை மற்றும் செண்பகராமன்புதூர் ஆகிய பகுதிகளிலே நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்து, நெல் கொள்முதல் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய 40 ஆண்டு கால நெல் கொள்முதல் வரலாற்றில், 2012 ஆம் ஆண்டு ஒரே வருடத்தில், இதுவரை இல்லாத அளவில், ஒரே பருவத்தில், 23,87,091 மெட்ரிக் டன் நெல்லை கொள்முதல் செய்த தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக 148,86,55,100 ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கிய தலைவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த அவைக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள், அவருடைய தொகுதியிலுள்ள தோவாளை பகுதியில் 3,000–லிருந்து 4,000 ஹெக்டேர் நெல் சாகுபடி செய்யப்படுவதாகவும், அங்கே 20,000 மெட்ரிக் டன் நெல் விளைச்சல் இருக்கிறது என்றும், அங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையம் தேவை என்றும் கேட்டார்கள். இந்த ஆண்டும் 1,808 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் திறக்கப்பட்டன. அதிலே, 14 இலட்சத்து 93 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. டெல்டா அல்லாத மாவட்டங்களில் 355 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில், உறுப்பினருடைய தொகுதியில் மூன்று நெல் கொள்முதல் நிலையங்கள் உட்பட, 6 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. அதிலே, குருந்தன்கோடு என்கின்ற பகுதி, உறுப்பினருடைய தொகுதி அல்ல. உறுப்பினருடைய தொகுதி அல்லாத இன்னொரு பகுதியான குருந்தன்கோடு என்ற இடத்தில் அமைந்துள்ள ஒரே ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில்தான் 2.680 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. நெல் வரத்து இல்லாத காரணத்தால், எந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் ஒரு கிலோ நெல்கூட கொள்முதல் செய்யப்படவில்லை. எனவேதான், அங்கு தற்போது கொள்முதல் நிறுத்தப்பட்டிருக்கிறது; நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் நடவடிக்கை நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி தொகுதிக்குட்பட்ட தாழக்குடி மற்றும் செண்பகராமன்புதூர், திட்டுவிளை பகுதிகளிலே நெல் வரவில்லை; அதனால், நெல் கொள்முதல் செய்யப்படவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே கொண்டு போகக்கூடிய நெல், அரசினுடைய விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு இருக்கின்ற காரணத்தால் கொள்முதலுக்கு மறுக்கப்படுகிறது. அதாவது, 4 சதவிகிதத்திற்கு மேல் கருப்பு நெல் இருந்தாலோ அல்லது 17 சதவிகிதத்திற்கு மேல் ஈரப்பதம் இருந்தாலோ அந்த நெல்லைக் கொள்முதல் செய்வதற்கு அதிகாரிகள் மறுக்கிறார்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, பனி அதிகமாக இருக்கக்கூடிய ஒரு பகுதி. எனவே, 4 சதவிகிதம் முதல் 6 சதவிகிதம் வரை கருப்பு நெல் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது.*

அதைப்போல, அங்கு அறுவடை இயந்திரம்மூலம் நெல் அறுவடை செய்யப்படுவதாலும், வேளாண்மைத் துறை அதிகாரிகள் விவசாயிகளிடத்திலே முழு விளைச்சல் வருவதற்குமுன்பாக அறுவடை செய்ய வேண்டுமென்று அறிவுறுத்துவதாலும் 22 சதவிகிதம் வரை ஈரப்பதம் வருகின்றது. பஞ்சாப் மாநிலத்திலே, சில மாவட்டங்களிலே 4 சதவிகிதத்திற்கு மேல் கருப்பு நெல்லும், 22 சதவிகிதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லும் வருகின்றது, இருந்தாலும் நெல் கொள்முதல் செய்யலாம் என்று விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையிலே, கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் விலக்கு அளித்து, அந்த விவசாயிகளின் நெல்லை கொள்முதல் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். தற்போது அரசினுடைய நெல் கொள்முதல் விலை என்பது குவிண்டாலுக்கு ரூபாய் 1,405 என நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆனால், கன்னியாகுமரி மாவட்டத்தில் வெளிச் சந்தையில் சுமார் 800 முதல் 900 ரூபாய் வரைதான் ஒரு குவிண்டாலுக்குக் கிடைக்கிறது. அது விவசாயிகளுக்கு மிகப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. எனவே கொள்முதல் நிலையத்தை ஏற்படுத்தி, விவசாயிகளின் நெல்லை கொள்முதல் செய்தால் ஓரளவுக்கு அவர்கள் பயன்பெறுவார்கள். எனவே, இந்த ஆண்டு மீண்டும் விதிவிலக்கு

அளித்து, நெல் கொள்முதல் செய்வதற்கு அரசு முன்வருமா என்று நான் கேட்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்வியைக் கேளுங்கள், திரு. ஆஸ்டின்.

திரு. எஸ். ஆஸ்டின்: 2006 முதல் 2011 வரை 90 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், அதன்பிறகு அ.தி.மு.க ஆட்சியில் 72 இலட்சம் மெட்ரிக் டன்னாக குறைந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையிலுள்ள பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 2001–2002 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார்கள். அதற்கு முன்னால் Monopoly procurement இருந்து வந்தது. யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் நெல்லை எடுத்துச் செல்லலாம், டெல்டாவில் மட்டும் gate போட்டுவிடுவார்கள். அது இல்லாமல் parallel procurement இருந்தது. அப்போதெல்லாம் விவசாயிகள் தமிழகத்தில் மிகப் பெரிய அளவில் உரிய விலை கிடைக்காமல் பாதிக்கப்பட்டார்கள். இங்கு இருக்கிற விவசாயம் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், டெல்டா பகுதியில் இருக்கிற விவசாயப் பெருமக்களுக்கும் நன்றாகத் தெரியும். அதனை மாற்றி, விவசாயிகள் உரிய விலையைப் பெறுவதற்கும், அவர்களுடைய நெல்லை உடனடியாக விற்பனை செய்வதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் 2002 ஆம் ஆண்டு பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்க வேண்டும் என்று சொன்னால், அதற்கு செலவுகள் இருக்கின்றன; ஒரு பட்டியல் எழுத்தர், ஒரு

2016 ஆகஸ்ட் 3]

காவலர் மற்றும் ஒரு உதவியாளர் என்று 3 பேர் தேவை. மேலும், நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு சரக்கு எடுத்துச் செல்வதற்கு, தராசு எடுத்துச் செல்வதற்கு மற்றும் materials எல்லாம் எடுத்துச் செல்வதற்கு இவர்கள் தேவைப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் சேர்த்து, ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை நடைமுறைப்படுத்தி செயல்படுத்த வேண்டுமென்று சொன்னால், மாதம் 25 ஆயிரம் ரூபாய் செலவாகும். செலவானாலும் பரவாயில்லை என்பதனை கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நெல் வரத்து இல்லை என்று சொன்னாலும், கன்னியாகுமரி மாவட்டத்திலே நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்க வேண்டும் என்பதற்காக 6 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்திருக்கின்றது. நெல்லே வரவில்லை என்பதுதான் உண்மை. நெல் வராததற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் சொல்கிற காரணம், சரியான காரணம் கிடையாது. அங்கிருந்து கேரளா மற்றும் எங்கு வேண்டுமானாலும் நெல்லைக் கொண்டு செல்லலாம். நெல்லையோ, அரிசியையோ இந்தியா முழுவதற்கும், எங்கு வேண்டுமானாலும் கொண்டு செல்லலாம். ஆந்திராவிலிருந்து, கேரளாவிலிருந்து நம்முடைய மாநிலத்திற்கு வருகின்றது. மாநிலங்களுக்கிடையில் கட்டுப்பாடு கிடையாது. எங்கே விலை கூடுதலாகக் கிடைக்கின்றதோ, அங்கே விவசாயிகள் விற்றுக் கொள்ளலாம். விவசாயிகள் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது, விவசாயிகளை, வியாபாரிகள் பாதிக்க வைத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நெல்லை, நேரடி நெல் கொள்முதல் நிலையத்திலும் விவசாயிகள் விற்பனை செய்யலாம், வெளியிலேயும் விற்பனை செய்துகொள்ளலாம். விலை கூடுதலாகக் கிடைக்கின்றபோது அந்த நெல்லை வெளியில் விற்கின்றார்கள், அதுதான் உண்மை. கன்னியாகுமரி மாவட்டத்தில், எந்த இடத்திலாவது நெல் விளைகிறது, இங்கே இவ்வளவு நெல் வரும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின் அவர்கள் சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு, அங்குள்ள விவசாயிகளிடமிருந்து கோரிக்கை வரப்பெறுமாயின் உடனடியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா

அவர்களுடைய அரசு அங்கே நேரடி நெல் கொள்முதல் நிலையத்தைத் திறக்கும் என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.*

திரு. என்.ஜி. பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களை வாழ வைக்கின்ற தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசையை நோக்கி வணங்குகின்றேன். சோளிங்கர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காவேரிப்பாக்கம் பகுதி, விவசாயிகள் நிறைந்த பகுதியாக இருக்கின்றது. அங்கிருந்து வேளாண் பெருமக்கள் 20 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நெல்லைக் கொண்டு செல்கின்றார்கள். காவேரிப்பாக்கம் பகுதியில் அரசுக்குச் சொந்தமான நிலங்களும் இருக்கின்றன. எனவே, நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை காவேரிப்பாக்கம் பகுதியில் அமைக்க அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சோளிங்கர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தங்கள் பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வேலூர் மாவட்டத்தில் தற்போது 4 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவை மூலமாக 8,590 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த இடத்தில் கொள்முதல் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்குமேயானால், அங்கே நெல் விளைச்சல் அதிகமாக இருந்தால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை*

2016 ஆகஸ்ட் 3]

வைத்தால், உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே, தேவைக்கேற்ப நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து கொள்ளலாம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அந்த ஆணையின் அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினைத் திறப்பதற்கு ஆவன செய்வார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ஆடலரசன் அவர்கள்.*

திரு. ப. ஆடலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தலைவர், முத்தமிழ் அறிஞர், மண்ணின் மைந்தர், தலைவர் அவர்களை வணங்குகிறேன். திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி தொகுதியில் அறுவடைக் காலங்களில் நேரடி கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வரப்படுகிற நெல் அனைத்தையும் கொள்முதல் செய்யும் வாய்ப்பில்லை. குறுகிய* amount–*க்கு மட்டும்தான்* purchase *செய்கிறார்கள். மீதம் இருக்கின்ற நெல் வெளியிலேயே வைக்கப்படுகிறது. அதைப் பாதுகாக்கின்ற வகையில், அதற்கு ஏதாவது கட்டடம் கட்டித் தரப்படுமா அல்லது அதனைப் பாதுகாக்க வேறு ஏதாவது திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆடலரசன் அவர்கள், தங்கள் தொகுதியான திருத்துறைப்பூண்டியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் எல்லாக் காலங்களிலும் இயங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதா, நெல்லைப் பாதுகாப்பதற்கு வழி இருக்கிறதா என்று கேட்டார்கள். அனைத்து நெல்லும் பத்திரமாக இருக்கிறது, பாதுகாக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், 17,90,000 மெட்ரிக் டன் நெல் தமிழ்நாடு முழுவதும் கொள்முதல் செய்யப்பட்டுக் கொண்டு இருக்கிறது. அவற்றில் டெல்டா மாவட்டங்களான திருத்துறைப்பூண்டி, திருவாரூர், தஞ்சாவூர்,*

நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் மட்டும் 14 இலட்சம் மெட்ரிக் டன் நெல் இந்த ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்தப் பாதுகாக்கும் முறை அனைத்துக் காலங்களிலும் பின்பற்றப்படும் முறை ஆகும். நெல் கூடுதலாக இரண்டு, மூன்று மாதங்களுக்கு வரும். அது உங்களுக்கே தெரியும். அந்த 2, 3 மாதங்களில் வெளியில் storage செய்து, இரயில்மூலம் அந்த நெல்லை வெளியில் அரவைக்கு அனுப்பப்படும் முறை, ஆண்டாண்டு காலமாக இருந்து கொண்டிருக்கின்ற முறை. அந்த முறைதான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. உங்கள் தொகுதியில் எந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைப்படுகின்றன என்று சொன்னால், தேவைக்கேற்ப அவ்விடத்தை ஆய்வு செய்து, உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு திறந்து வைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

19—

வீட்டுமனைப் பட்டா

***398—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், மருவூர் வருவாய் கிராமம் தெற்கு ஆதி திராவிடர் தெருவில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,